Asylum Support Partnership
help and advice

refugee action | North of England Refugee Service | Refugee Council | scottish refugee council | Welsh Refugee Council Cyngor Ffoaduriaid Cymru

March 2010 Tamil

# பணம் உதவிக்கு மட்டும் விண்ணப்பித்தல்: குடும்பம் அல்லது நண்பர் ஒருவருடன் சேர்ந்து வாழ்தல்

நீங்கள் தற்போது யூகே எல்லை முகமை (UK Border Agency - UKBA) விடமிருந்து தங்குமிட வசதி மற்றும் பண உதவி ஆகிய இரண்டையுமே பெற்றுக் கொண்டிருப்பவராக இருந்து , இத்தங்குமிட வசதியிலிருந்து வெளியேறி, குடும்பத்துடனோ அல்லது ஒரு நண்பருடனோ தங்க விரும்பினால், வெளியேறுவதற்குமுன் நீங்கள் UKBAவிடம் கூறவேண்டும். நீங்கள் UKBA வழங்கியுள்ள ஆரம்பக்கட்ட தங்குமிட வசதியில் தங்கியிருந்தால், உங்கள் தங்குமிட வசதி வழங்குனருக்கும் அதைப்பற்றி நீங்கள் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுவது, நீங்கள் பெறுகின்ற பண உதவியை UKBA நிறுத்திவிடுவதற்கு வழிவகுக்கக்கூடும்.

இச்சிற்றேடு கீழ்க்கண்டவற்றை அடையாளம் காண்கிறது:

- நீங்கள் வெளியேறுவது நீங்கள் UKBAவிடமிருந்து பெறுகின்ற நிதி உதவியை எவ்வாறு பாதிக்கககக்கூடும்
- வெளியேறுவதற்கு முன் நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டியவை யாவை
- ஒரு குடும்ப உறுப்பினர் அல்லது நண்பருடன் வாழ்வதற்கு UKBAவிடம் எவ்வாறு அனுமதி கேட்க வேண்டும்.
- உங்கள் கோரிக்கைக்கு ஆதரவாகத் தேவைப்படும் ஆவணங்கள் எவை மற்றும்
- எங்களால் உங்களுக்கு எவ்வாறு உதவ முடியும்

## ஒரு நண்பர் அல்லது குடும்ப உறுப்பினருடன் வாழச் செல்வது UKBAவிடமிருந்து நான் பெறுகின்ற பண உதவியை பாதிக்கக்கூடுமா?

உங்கள் குடும்பம் அல்லது நண்பருடைய தங்குமிடவசதிக்கு அல்லது குடும்பச் செலவுக் கட்டணங்களுக்கு UKBA பணம் தராது என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். எனவே, தங்களுடைய கட்டணங்களுக்கு நீங்களும் பங்களிக்க வேண்டும் என்பதை உங்கள் நண்பரோ அல்லது குடும்ப உறுப்பினரோ எதிர்பார்க்காமல் இருக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியமாகும்.

## எனது நண்பர் அல்லது குடும்ப உறுப்பினர் யூகேயின் இன்னொரு பகுதியில் வாழ்ந்தால், நான் சென்று அவர்களுடன் சேர்ந்து வாழ முடியுமா?

ஆம், இன்னொரு பகுதியில் வாழும் ஒரு நண்பர் அல்லது குடும்ப உறுப்பினருடன் சேர்ந்து வாழ்வதற்கு நீங்கள் கோரிக்கை விடுக்கலாம். இருப்பினும், வேறொரு நகரத்திலோ அல்லது யுகேயின் இன்னொரு பகுதியிலோ வாழும் ஒருவருடன் நீங்கள் வாழ விரும்பினால், உங்கள் குடிவரவு நிலை மாற்றப்பட வேண்டும் மற்றும் நீங்கள் வேறொரு பகுதிக்கு இடம்பெயர வேண்டும்.


Asylum Support Partnership is a partnership project hosted by the British Refugee Council
British Refugee Council, (commonly called the Refugee Council) is a company limited by guarantee registered in England and Wales, [No 2727514] and a registered charity, [No 1014576].
Registered office: 240-250 Ferndale Road, London SW9 8BB, United Kingdom, VAT no: 936 519 988

OISC No: N200100132 Community Legal Service

**நீங்கள் வெளியேறுவதற்கு UKBAவின் அனுமதியைக் கட்டாயம் பெறவேண்டிய யூகேயின் ஒரு பகுதியில் நீங்கள் வாழ்ந்தால், அவர்களிடமிருந்து எழுத்துமூல அனுமதி பெறப்படும்வரை நீங்கள் வெளிறேக்கூடாது. அனுமதியின்றி வெளியேறுவது உங்கள் அடைக்கல கோரிக்கை மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.**

**UKBAவிடமிருந்து நீங்கள் அவசியம் எழுத்துமூல அனுமதி பெற வேண்டுமா என்பது குறித்து உங்களுக்கு தெளிவாகத் தெரியாவிட்டால், உங்கள் அருகிலுள்ள அகதி முகமையிடமிருந்து ஆலோசனை பெறவும்.**

## வெளியேறுவதற்கு முன் நான் கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றவை யாவை?

- பிரிவு **55 (Section 55) (**பண உதவி வழங்க மறுப்பதற்கு **UKBA**விற்கு அதிகாரத்தை அளிக்கும் சட்டம்**)**

யூகே வந்தபின் மூன்று தினங்கள் (72 மணி நேரம்) ஆனபின் நீங்கள் அடைக்கலத்திற்கு விண்ணப்பித்திருந்து, பண உதவிக்காக மட்டுமே விண்ணப்பிக்க விரும்பினால், **யூகே எல்லை முகமையுடன்** (UKBA) பிரிவு 55 நேர்காணல் ஒன்றில் நீங்கள் பங்கேற்க வேண்டியிருக்கலாம்.

இந்த நேர்காணலின்போது, **யூகே எல்லை முகமை** (UKBA) கீழ்க்கண்டவற்றை பரிசீலிக்கும்:

- நியாயமாக, உங்களால் இயன்றவரை விரைவில் அடைக்கலத்திற்கு நீங்கள் விண்ணப்பித்துள்ளீர்களா
- உங்கள் வரவு குறித்து நீங்கள் அளித்துள்ள விவரங்களை அவர்கள் நம்புகின்றனரா
- UKBA உதவி வழங்க மறுத்தால், நீங்கள் மனிதநேயமற்ற அல்லது அவமானகரமான முறையில் நடத்தப்படுவீர்களா.

அடைக்கலத்திற்கான உங்கள் கோரிக்கையை நீங்கள் நியாயமான காலகட்டத்திற்குள் (‘நியாயமாக இயன்றவரையில் விரைவாக’) அளிக்கவில்லை என்று UKBA முடிவு செய்தால், உங்களுக்கு எந்தவொரு பண உதவியையும் செய்வதற்கு அவர்கள் மறுக்கக்கூடும். இந்த முடிவுக்கு நீங்கள் மேல்முறையீடு செய்ய முடியாது என்றாலும், அதனை மறுபரிசீலனை செய்யும்படி நீங்கள் அவர்களைக் கேட்டுக் கொள்ளலாம்.

- **சட்ட ஆலோசனையை அணுகுதல்**

யூகேயின் இன்னொரு பகுதிக்கு நீங்கள் குடிபெயர்ந்தால், உங்களுடைய தற்போதைய சட்டப் பிரதிநிதி தொடர்ந்து உங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க முடியாது என்று கூறக்கூடும்.

ஸ்காட்லாந்து யூகேயின் மற்ற பகுதிகள் போலல்லாமல் வித்தியாசமான சட்ட அமைப்பை ஸ்காட்லாந்து கொண்டுள்ளது. உங்கள் விவகாரம் **நீதிமன்ற மதிப்புரையின்** (Judicial Review) கீழ் அல்லது **ஸ்காட்லாந்தின் குற்ற அமர்வு நீதிமன்றத்தின்** (Court of Session in Scotland) கீழ் மேல்முறையீட்டில் இருந்தால், யூகேயின் இன்னொரு பகுதிக்கு இடம்பெயர கோரிக்கை விடுப்பதற்குமுன் உங்கள் விருப்பத்தேர்வுகளை உங்கள் சட்டப் பிரதிநிதியுடன் நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டுமென்று நாங்கள் தீவிரமாக அறிவுறுத்துகிறோம்.

- **பயணச் செலவுகள்**

நீங்கள் இடம்பெயர முடிவு செய்தால், உங்கள் பயணச் செலவுக்கு UKBA பங்களிக்காது மற்றும் பயணச் செலவை நீங்கள்தான் ஏற்க வேண்டும்.

## வெளியேறுவதற்குமுன் நான் UKBAவிடமிருந்து அவசியம் அனுமதி பெற வேண்டுமென்றால் நான் என்ன செய்ய வேண்டும்?

நீங்கள் கையெழுத்திட்டுள்ள ஓர் எழுத்துமூல கோரிக்கையை நீங்கள் UKBAவிடம் அளிக்க வேண்டும். தங்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு உங்களை அனுமதிப்பதை உறுதி செய்யும் ஓர் எழுத்துமூல ஆதாரத்தையும் உங்கள் நண்பர் அல்லது குடும்ப உறுப்பினரிடமிருந்து நீங்கள் பெற்றுத்தர வேண்டும்.

உங்கள் நண்பர் அல்லது குடும்ப உறுப்பினருக்கு தங்களுக்கு சொந்தமான தங்குமிட வசதி இருந்தால், கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிட்டு அவர்கள் ஒரு கடிதத்தை வழங்க வேண்டும்:

- தங்குமிட வசதி தங்களுக்கு சொந்தமானது மற்றும் தங்களுடன் நீங்கள் தங்குவதை அவர்கள் அனுமதிக்க விரும்புவது
- வாடகை, அல்லது எரிவாயு, மின்சாரம் மற்றும் நீர் (பயன்பாட்டுப் பொருட்கள் என்று அழைக்கப்படுபவை) ஆகியவற்றுக்கான கட்டணங்களுக்கு நீங்கள் பங்களிக்க வேண்டும் என்று எதிர்பார்க்காமல் இருப்பது, மற்றும்
- தங்குமிட வசதியை மட்டுமே உங்களுக்கு அளிக்க முடிவது மற்றும் எந்தவொரு கூடுதல் நிதி உதவியையும் உங்களுக்கு வழங்க இயலாமல் இருப்பது.

இவற்றையும் அவர்கள் வழங்க வேண்டும்:

- பொருந்தும் முகவரியுடன் அவர்கள் பெயரையும் குறிப்பிடும் சமீபத்திய பயன்பாட்டுக் (எரிவாயு, மின்சாரம், நீர்) கட்டணச் சீட்டு, மற்றும்
- தங்கள் வீடு தங்களுக்கு சொந்தமானது என்பதற்கான ஆதாரம், உதாரணமாக அடமான அறிக்கை.

உங்கள் நண்பரோ அல்லது குடும்ப உறுப்பினரோ தங்கள் தங்குமிட வசதியை வாடகைக்கு எடுத்திருந்தால், அவர்கள் தரவேண்டியது:

- சொத்து உரிமையாளரிடமிருந்து, குறிப்பிட்ட தங்குமிட வசதியில் உங்கள் நண்பருடன் நீங்கள் சேர்ந்து வாழ்வதற்கு அனுமதிக்கும், கையெழுத்திடப்பட்ட கடிதம்
- உங்கள் நண்பரிடமிருந்து வாடகை அல்லது பயன்பாட்டுப் பொருட்களுக்கான (எரிவாயு, மின்சாரம் மற்றும் நீர்) கட்டணங்களுக்கு நீங்கள் நிதி சார்ந்த முறையில் பங்களிக்க வேண்டும் என்று எதிர்பார்க்காமல் அவர்கள் உங்களுக்கு இடமளிக்க ஒப்புக்கொள்வதை உறுதி செய்யும் கையெழுத்திடப்பட்ட கடிதம் மற்றும்
- பொருந்தும் முகவரியுடன் அவர்கள் பெயரையும் குறிப்பிடும் சமீபத்திய பயன்பாட்டுக் கட்டணச் சீட்டு.

### எங்களால் எவ்வாறு உதவ முடியும்?

குடும்பம் அல்லது நண்பருடன் சேர்ந்து வாழ்வதற்கான அனுமதி கேட்கும் எழுத்துமூல கோரிக்கையை UKBAவிற்கு அளிப்பதற்கு அகதி முகமைகளால் உதவ முடியும். உங்கள் உள்ளூர் அகதி முகமை எங்குள்ளது என்பதை உங்கள் தற்போதைய UKBA தங்குமிட வசதி சேவை வழங்குனரால் கூற முடியும், அல்லது அடுத்த பக்கத்தின் கடைசியில் பட்டியலிடப்பட்டுள்ள வலைத்தள முகவரியை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் புதிய தொடர்பு விவரங்களையோ அல்லது சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள ஏதேனும் மாற்றம் குறித்தோ UKBAவிற்கு நீங்கள் தெரிவிக்க வேண்டியிருந்தால், உங்கள் அருகாமையிலுள்ள அகதி முகமையை நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

### அடுத்ததாக என்ன நடக்கும்?

குடும்பம் அல்லது ஒரு நண்பருடன் சேர்ந்து வாழ்வதற்கான அனுமதிக்கு நீங்கள் விண்ணப்பிப்பதாக இருந்தால், உங்கள் கோரிக்கையை பரிசீலிப்பதற்கு UKBAவிற்கு பல வாரங்கள் ஆகலாம். தங்கள் முடிவை உங்களுக்குத் தெரிவிப்பதற்கு UKBA உங்களுக்கு நேரடியாகக் கடிதம் எழுதும்.

நான்கு வாரங்களுக்குப் பிறகும் நீங்கள் UKBAவிடமிருந்து எந்தவொரு தகவலையும் பெறவில்லையென்றால், அகதி முகமைகளில் ஒன்றிடம் பேசவும்.

நீங்கள் வெளியேறிச் செல்வதற்கான கோரிக்கைக்கு ஒப்புதலளிக்கப்பட்டால், UKBA உங்களுக்கு நேரடியாகக் கடிதம் எழுதி, எந்த சரியான தேதியில் நீங்கள் வெளியேற திட்டமிட்டிருக்கிறீர்கள் என்பதைத் தங்களுக்குத் தெரிவிக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்ளும். அதன்பின் அவர்கள் தங்கள் கடிதப் போக்குவரத்து அனைத்தையும் உங்கள் புதிய முகவரிக்கு அனுப்புவார்கள்.

நீங்கள் வெளியேறியபின், உதவி பெறுவதில் உங்களுக்கு ஏதேனும் பிரச்னைகள் ஏற்பட்டால், உங்கள் புதிய முகவரிக்கு அருகிலுள்ள அகதி முகமையைத்தான் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டுமேயன்றி, உங்கள் பழைய பகுதியில் உள்ள அகதி முகமையை அல்ல.